




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 269 | 4 Pages | 27.4.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 269 | 4 பக்கங்கள் | 27.4.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்**
**றேதம் பலவுந் தரும்**

**விளக்கம்:**

பற்றுக்களைத் துறந்தோம் என்று சொல்கின்றவரின் பொய்யொழுக்கம் என்ன செய்தோம் என்ன செய்தோம் என்று வருந்தும் படியான துன்பம் பலவும் தரும்.

## பஹல்காம் தாக்குதல்: இந்தியாவின் குற்றச்சாட்டை நிராகரித்து பாகிஸ்தான் மந்திரிசபையில் தீர்மானம்

இஸ்லாமாபாத், ஏப்.27

காஷ்மீரில் உள்ள பஹல்காம் சுற்றுலா தளத்தில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இந்த பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து இந்தியாபாகிஸ்தான் இடையிலான உறவில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்கள் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. மேலும் சிந்து நதி ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதாக இந்தியா அறிவித்தது. தொடர்ந்து பாகிஸ்தானும் தனது வான் எல்லையை மூடுவது, சிம்பா ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பது உள்ளிட்ட அடாவடி அறிவிப்புகளை வெளியிட்டது.

இந்த நிலையில், பஹல்காம் தாக்குதல் தொடர்பாக இந்தியாவின் குற்றச்சாட்டுகளை நிராகரித்து பாகிஸ்தான் மந்திரிசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் இந்த தீர்மானத்தை அந்நாட்டின் துணை முதல்மந்திரி இஷாக் தார் முன்மொழிந்தார். இதற்கு அனைத்துக் கட்சி எம்.பி.க்களும் ஆதரவு தெரிவித்தனர்.

முன்னதாக இந்த விவகாரத்தில் பாகிஸ்தானின் தற்போதைய நிலைப்பாடு குறித்து 26 நாடுகளைச் சேர்ந்த தூதர்களுக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் விளக்கமளித்துள்ளதாக இஷாக் தார் தெரிவித்தார். மேலும் இந்தியாவின் எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்கொள்ள பாகிஸ்தானின் ஆயுதப் படைகள் தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில், பஹல்காம் தாக்குதலுடன் பாகிஸ்தானை இணைக்கும் அனைத்து ஆதாரமற்ற முயற்சிகளையும் தங்கள் அரசு நிராகரிப்பதாகவும், அப்பாவி பொதுமக்களைக் கொல்வது பாகிஸ்தானின் மாண்புக்கு எதிரானது என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் பயங்கரவாத பிரச்சினையை அரசியல் நோக்கத்திற்காகவும், பாகிஸ்தானை அவமதிப்பதற்காகவும் பயன்படுத்துவதை கண்டிப்பதாக தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக இந்தியா அறிவித்ததை கண்டித்தும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## பஹல்காம் தாக்குதல் விவகாரம்: இந்தியாவுக்கு இலங்கை ஆதரவு



கொழும்பு, ஏப்.27

இலங்கை அதிபர் திசநாயகா, பிரதமர் மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் விவகாரத்தில் இந்தியாவுக்கு இலங்கையின் ஆதரவை தெரிவித்தார். பயங்கரவாதத்துக்கு எதிரான இலங்கையின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தார். விரைவில் பதற்றம் தணியும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இதுபோல், இலங்கை முன்னாள் அதிபர் ரணில் விக்ரமசிங்கே, பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதி தனது ஆதரவை தெரிவித்தார். பஹல்காம் தாக்குதலுக்கு இலங்கை வெளியுறவு அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

## டிரம்பின் கண்டனத்தை மீறி உக்ரைன் மீது ரஷியா மீண்டும் டிரோன் தாக்குதல் 3 பேர் பலி



கீவ், ஏப்.27

ரஷியாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே 3 ஆண்டுகளை கடந்து போர்நடைப்பெற்று வருகிறது. இதில் அமெரிக்கா தலையிட்டு போரை உடனடியாக நிறுத்த இரு நாடுகளையும் வலியுறுத்தி பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. இந்த நிலையில் நேற்று உக்ரைனின் தலைநகரில் தென்கிழக்கு பகுதியில் உள்ள அடுக்குமாடி கட்டிடத்தின் மீது ரஷியா சரமாரி டிரோன் தாக்குதலை நடத்தியது.

இந்த தாக்குதலில் குழந்தை மற்றும் 76 வயது பெண் உட்பட 3 பேர் கொல்லப்பட்டனர், மேலும் 10 படுகாயம் அடைந்தனர். நேற்று முன்தினம் உக்ரைன் மீது ரஷியா நடத்திய தாக்குதலில் 9 பேர் பலியானார்கள். இதற்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் கண்டனம் தெரிவித்து "தாக்குதலை நிறுத்துங்கள் புதின்" என்று கூறியிருந்தார். அதையும் மீறி ரஷியா மீண்டும் தாக்குதலை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சிவகாசி வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஏப்.27

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நெடுங்குளம் கிராமத்தில் இயங்கிவந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் இன்று (26.4.2025) காலை சுமார் 10.45 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம் புதுப்பட்டி, சொக்கம்பட்டியைச் சேர்ந்த மாரியம்மாள் (வயது 51) , எஸ் கொடிக்குளம், கூமாப்பட்டியைச் சேர்ந்த திருவாய்மொழி (வயது 48) மற்றும் எம் சொக்கலிங்கபுரத்தைச் சேர்ந்த கலைச்செல்வி (வயது 35) ஆகிய மூன்று நபர்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.




மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் பாக்கியலட்சுமி (வயது 55), கோமதி (வயது 55), பாத்திமுத்து (வயது 55) , ராபியா பீவி (வயது 50) , ராமசுப்பு (வயது 43) , லட்சுமி (வயது 40) , முனியம்மாள் (வயது 40) ஆகியோருக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 4 லட்சமும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ரூ. 1 லட்சமும், லேசான காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்காசி மாவட்டம் வீ.கே.புதூர் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு வருவாய்த்துறைச் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ஒரு மணி நேரம் வெளிநடப்பு மற்றும் மாவட்ட & வட்ட தலைநகர் ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம் வீ.கே. புதூர் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு வருவாய்த்துறைச் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ஒரு மணி நேரம் வெளிநடப்பு மற்றும் மாவட்ட & வட்ட தலைநகர் ஆர்ப்பாட்டம் 38 மாவட்டங்களில் 40,000 வருவாய்த்துறை அலுவலர்கள் பங்கேற்று ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது

தென்காசி மாவட்டம் வீ.கே. புதூர் துணை வட்டாச்சியர் சீனிப் பாண்டி அவர்கள் தலைமையில் அனைத்து அலுவலர்களும் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது




தமிழக முதல்வர் வருவாய்த்துறையில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் ஒன்றிணைந்து ஏற்படுத்தியுள்ள FERA கூட்டமைப்பின் நிர்வாகிகளை அழைத்து பேசி கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றி சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்த முன்வரவேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகள் முன் வைத்து ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது

இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து நிலை வருவாய்த்துறை அலுவலர்களின் பணி பாதுகாப்பினை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். வருவாய்த்துறை அலுவலர்களுக்கான சிறப்பு பணி பாதுகாப்பு சட்டத்தை உடன் இயற்றிட வேண்டும். வருவாய்த்துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு அதீதமான பணி நெருக்கடி ஏற்படுத்தப்படுவது தொடர்பாகவும், குறிப்பாக களப்பணியாளர்களுக்கு போதிய கால அவகாசம் வழங்காமல் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு, மன அழுத்தத்துடன் பணிபுரிய நிர்பந்தம் செய்வது தொடர்பாக ஏற்கனவே வருவாய்த்துறை அரசு செயலாளர் அவர்களிடம் விரிவாக முறையீடு செய்யப்பட்டுள்ள நிலையில், உடன் தீர்வு வழங்கிட வேண்டும். வருவாய்த்துறை அலுவலர்களின் பணித்தன்மை மற்றும் பணிப்பளு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, அனைத்து நிலை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் & தனி ஊதியம் வழங்கிட வேண்டும்.

நாடாளுமன்ற சட்டமன்ற தேர்தல் நடத்துதல், வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி, பேரிடர் மேலாண்மை பணி, சட்டம் மற்றும் ஒழுங்கு பராமரிப்பு பணி, பொதுமக்களுக்கான அனைத்து தேவைகளையும் நிறைவேற்றும் பணி மற்றும் தமிழக சிறப்புத் திட்டங்களைப் பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் பணி ஆகியவற்றை வருவாய்த்துறை அலுவலர்கள் ஓய்வின்றி மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய அலுவலர்கள்வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால் பொதுமக்களுக்கான பணிகள் முழுமையாக பாதிக்கப்படும் என்ற அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் இதில் நேரடியாக தலையிட்டு நியாயமான கோரிக்கைகளை உடன் நிறைவேற்ற வேண்டும் என அனைத்து வருவாய்த்துறை அலுவலர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். என்று துணை வட்டாச்சியர் சீனிப் பாண்டி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் வருவாய் துறை சார்ந்த அனைத்து அலுவலர்களும் கலந்து கொண்டனர்

## இஞ்சிமேடு சிவன் கோயிலில் பிரதோஷ விழா; திரளான பக்தர்கள் பங்கேற்பு

திருவண்ணாமலை மாவட்டம் பெரணமல்லூர் அடுத்த இஞ்சிமேடு கிராமத்தில் மிகவும் பிரசித்தி திருமணி சேறையுடையார் சிவன் கோயில் அமைந்துள்ளது.

இந்த கோயிலில் மாதம்தோறும் பவுர்ணமி கிரிவலம் மற்றும் பிரதோஷ விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் சிவயோகி ஐ.ஆர்.பெருமாள் தலைமையில் சிவாச்சாரியார் ஆனந்தன் முன்னிலை யில் சித்திரை மாதம் தேய்பிறை பிரதோஷம் முன்னிட்டு மாலை 5 மணிக்கு மேல் மூலவருக்கு முன் அமைந்திருக்கும் நந்தி பகவானுக்கு பால், தயிர், தேன், இளநீர், மஞ்சள், குங்குமம், சந்தனம் கொண்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. இதன் பின்னர் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட நந்தி பகவான் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். மேலும் நன்கு அலங்கரிக்கப்பட்ட உற்சவர் கோயில் வளாகத்தில் உலா வந்தார். இந்த நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி அருள் பெற்றனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



## மஞ்சவாடி பகுதியில் சாலை அமைப்பு பணியால் தொடரும் போக்குவரத்து பாதிப்பு: தற்காலிக சாலை அமைத்திட பொதுமக்கள் கோரிக்கை

மஞ்சவாடி பகுதியில் சாலை அமைப்பு பணியால் தொடரும் போக்குவரத்து பாதிக்கப்பட்டு வருவதால், உடனடியாக தற்காலிக சாலை அமைத்திட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தருமபுரி மாவட்டம்,அரூரி இருந்து சேலம் செல்லும் சாலையில் ஏ. பள்ளிப்பட்டியில் இருந்து மஞ்சவாடி கனவாய் வரையில் 4 வழிப்பாதை அமைப்பு பணி தற்போது நடந்து வருகின்றது.

இதற்காக தற்போது சாமியாபுரம் முதல் மஞ்சவாடி வரையில் உள்ள பழைய சாலைகள் அகற்றப்பட்டு புதிய சாலைப் பணிகள், பல்வேறு இடங்களில் தடுப்பு சுவர்கள், பாலங்கள் அமைக்கும் பணி மேற்க்கொள்ள பட்டுள்ளது.

கணவாய் பகுதியில் மேடாக இருந்த பகுதிகள் வெட்டி அகற்றப்பட்டு சமமாக்கப்படும் பணிகளும் தற்போது நடைப்பெற்று வருகின்றது. கடந்த அக்டோபர் , டிசம்பர் மாதங்களில் பெய்த மழையால் பாதை அமைப்பு பணி பாதிக்கப்பட்டது, இதனால் திருப்பத்தூர் , அரூர் , பாப்பிரெட்டிப்பட்டி, பகுதியில் இருந்து சேலம் செல்லும் பிரதான சாலையான இதில் கடும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது ஆங்காங்கே சாலை அமைப்பு பணி முடிவுற்று இருந்தாலும், காளிப்பேட்டை, மஞ்சவாடி பகுதியில் நடைபெற்று வரும் பணியால் வாகன போக்குவரத்து பெரும் சிரமத்திற்கு இடையே நடந்து வருகின்றது. குண்டும் குழியுமாக , உள்ள சாலையில் செல்லும் கனரக லாரிகள், பேருந்துகள், கார்கள் போன்றவைகள் நிலைத் தடுமாறி விபத்துக்குள்ளாவது, பள்ளங்களில் சிக்கி கொள்வதும் அதிகரித்து வருகின்றது. கடந்த சில மாதங்களாக மந்த கதியில் சாலை அமைப்பு பணி நடந்து வருகின்றது. சாமியாபுரம் பகுதியில் சாலை அமைக்கும் இடங்களில் போதிய மாற்றுப் பாதை அமைக்காமல் உள்ளதால் சுமார் 8 கிலோ மீட்டர் தூரத்தை கடக்க 1 மணி நேரத்திற்கும் மேலாகும் நிலை உள்ளது. அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் இருந்து அவசரமருத்துவ சிகிச்சைக்கும் மற்றும் அவசர வேளையாக சேலம் செல்பவர்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். சாலை முடிவடைய இன்னும் சில மாதங்கள் ஆகும் என்ற நிலையில் தற்காலிக பாதை அமைத்து போக்குவரத்தை தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்






# மதுரையில் பூனைக்கடியால் பாதிக்கப்பட்ட இளைஞர் அரசு மருத்துவமனையில் தனி சிகிச்சை அறையில் தூக்கிட்டு தற்கொலை

மதுரை அவனியாபுரத்தைச் சேர்ந்த பாலமுருகன் (25) கடந்த சில நாட்களுக்கு முன்பு பூனை ஒன்று கடித்துள்ளது. இதனையடுத்து சிகிச்சை பெறாமல் அலட்சியமாக விட்ட நிலையில் அது பெரிய அளவிலான காயம் ஏற்பட்டுள்ளது.

பின்னர் தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்ற பின்னர் அங்கிருந்து அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரைத்துள்ளனர்.

பின்னர் பூனைக்கடியால் பாதிக்கப்பட்ட பாலமுருகன்



மதுரை அரசு மருத்துவமனை ரேபிஸ் சிகிச்சை வார்டில் நேற்று இரவு அனுமதித்தபோது திடீரென்று தப்பி ஓட முயன்றவரை பிடித்து இரவு மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இதனையடுத்து சிகிச்சைக்காகரேபிஸ்சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு தனி அறையில் இருந்த நிலையில் கடுமையான வலி மற்றும் மன உளைச்சல் காரணமாகதிடிரெனஅதிகாலை அவருக்கு வழங்கப்பட்டிருந்த போர்வையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இது குறித்து அரசு மருத்துவமனை காவல்நிலைய காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். பூனைக்கடியை அலட்சியமாக விட்டதால் மூன்று மாதத்திற்கு பிறகு மிகப் பெரிய உடல்நல குறைவு ஏற்பட்டு இளைஞர் தனியாக சிகிச்சைக்காக அடைக்கப்பட்ட நிலையில்தூக்கிட்டு உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது .

பூனைக்கடியால் பாதிக்கப்பட்டு தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்ட இளைஞர்பாலமுருகனின் உடல் அதிகளவு பாதுகாப்புடன் அரசு ராஜாஜி மருத்துவமனை பிணவறையில் உடற்கூராய்விற்காக வைக்கப்பட்டுள்ளது.

# கொங்கராம்பட்டில் ஸ்ரீ மஞ்சியம்மன் ஆலயத்தில் வழிபட தடை விதித்த தனி நபர்கள்: பொதுமக்கள் அதிருப்தி

ஆரணி அடுத்த கொங்கராம்பட்டு கிராமத்தில் உள்ள ஸ்ரீமஞ்சியம்மன் ஆலயத்தில் திடீரென வழிபட தனிநபர்கள் தடை விதித்ததால் 100 அடி தூரத்தில் அம்மனை வைத்து கூழ்ஊற்றி திருவிழா நடத்தியதால் பொதுமக்கள் அதிருப்தி அடைந்தனர்.

ஆரணி அடுத்த கொங்கராம்பட்டு கிராமத்தில் 9வது வார்டில் உள்ள ஸ்ரீ மஞ்சியம்மன் ஆலயத்தில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக வருடந்தோறும் அப்பகுதி மக்கள் கூழ்வார்க்கும் திருவிழா நடத்தி பொங்கல் வைத்து வழிபட்டு வந்தனர். இந்நிலையில் அந்த இடம் தனிநபர்கள் மீது பட்டா இருப்பதாக கூறி இங்கு வழிபடக்கூடாது என்று தடை விதித்ததாக தெரிகிறது. இதனால் அப்பகுதி





மக்கள் வீட்டிலேயே பொங்கல் வைத்து கோயிலிலிருந்து சுமார் 100 அடி தூரத்தில் சாலையோரத்தில் அம்மனை வைத்து வழிபட்டு கூழ்வார்க்கும் திருவிழாநடத்தினர்.

இது குறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது, இக்கோயில் கட்டப்பட்டு சுமார்150 ஆண்டுகள் இருக்கும். இக்கோயிலில் எங்கள் தாத்தா காலத்திலிருந்தே கூழ்வார்க்கும் திருவிழா நடத்தப்பட்டு பொங்கல் வைத்து வழிபட்டு வந்தனர்.இப்பகுதி மக்கள் அனைவரும் மஞ்சியம்மன் கோயிலில்தான் தங்கி வழிபட்டு செல்வோம். தற்போது தனிநபர்கள் அங்கு வந்து இது எங்களின் பட்டா சொத்து. யாரும் இங்கு வராதீங்க என்று கூறியதால் அப்பகுதி மக்கள் அவரவர் வீட்டிலேயே பொங்கல்வைத்துசாலையோரத்தில் அம்மனை வைத்து வழிபட்டனர். இதனால் அப்பகுதி மக்கள் கோயிலுக்குள் செல்ல விடாமல் தடுக்கிறார்களே என்றும் இதனால் கிராமத்திற்கு கெடுதல் நடக்கும் என்றும் தெரிவித்தனர்.இப்பிரச்சினையை ஆளும் கட்சியான திமுக வினரே பிரச்சினையை உருவாக்கி வேடிக்கை பார்க்கிறார்கள் என்றும் புகார் தெரிவித்தனர்.

# ஆண்டிபட்டியில் ஜீவன் டிரஸ்ட் குடிமக்கள் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு சார்பாக இலவச சட்ட உதவி முகாம்

கம்பம், ஏப். 27

தேனி மாவட் டம் ஆண்டிபட்டி ஜீவன் டிரஸ்ட் மற்றும் குடிமக்கள் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு சார்பாக இலவச சட்ட உதவி முகாம் மாவட்ட பொறுப்பாளர் முருகேசன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில் வழக்கறிஞர்கள் விஜயராஜ், இராமச்சந்திரன் ஆகியோர் போக்சோ சட்டம், இளைஞர்களை சீரழிக்கும் செல்போன்களால் ஏற்படும் சைபர் கிரைம், பெண்கள் மீதான வன்கொடுமை, தீண்டாமை வன்கொடுமை, குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் போன்ற சட்டங்களின் விதிகள் குறித்து தெளிவாக எடுத்து கூறினார்கள்.

மேலும் பாதிக்கப்பட்டோர் வழக்கறிஞர்களின் ஆலோசனைப்படி செயல்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்கள். இம்முகாமில் பல்வேறு வன்முறையால் பாதிக்கப்பட்டவர் களுக்கான வழக்கின் தற்போதைய நிலை, நீதிமன்றத்தில் செய்ய வேண்டிய மேல் முறையீடு கிடைக்க வேண்டிய நிவாரணம் குறித்தும் ஆலோசனை வழங்கப்பட்டது.




இனி வரும் காலங்களில் கிராம மக்கள் பங்களிப்புடன் கிராம அளவிலான சட்ட விழிப்புணர்வு கூட்டங்களை மாவட்ட காவல் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுடன் இணைந்து நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. முகாமில் குடிமக்கள் விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு சார்பாக கண்ணன், பொன்மணி, மகாராஜன், சீனியப்பன், ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் வீரன், சுக்ரா டிரஸ்ட் ரூபாவதி மற்றும் பாதிக்கப்பட்டோர் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஒட்டன்சத்திரத்தில் வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 1 மணிநேரம் வெளிநடப்பு ஆர்ப்பாட்டம்

ஒட்டன்சத்திரம் ஏப் 27

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வட்டாச்சியர் அலுவலகத்தில் பணியாற்றி வரும் அலுவலர்கள் முதல் கிராம உதவியாளர்கள் வரை ஓர் அணியில் திரண்டு வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு (பெரா) சார்பில் ஒட்டன்சத்திரம் வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் கு. மகாராஜா, வரதராஜன், தினேஷ்பாரத், கனகராஜ், தலைமையில் 1 மணி நேர வெளிநடப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இதில்




பின்வரும் கோரிக்கைகளான வருவாய்த் துறையில் பணியாற்றுகின்ற அலுவலர் மற்றும் பணியாளர்களின் உயிர் உடமைகளை காக்கும் வகையில் சிறப்பு பணி பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்ற வேண்டும், அனைத்து நிலையிலும் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக விரைந்து நிரப்பி விட வேண்டும், வருவாய்த் துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு அதிகமான பணிச்சுமையையும் போதிய கால அவகாசம் வழங்காமல் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு நிர்பந்திக்கும் செயலை அரசு கைவிட வேண்டும் என்றும், வருவாய்த்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கு 5% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது அதை மீண்டும் 25%உயர்த்தி வழங்கவும் கிராம உதவியாளருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் ரத்து செய்யப்பட்டதை மீண்டும் வழங்கிட வேண்டும்,

வருவாய்த்துறையில் அனைத்து நிலை பணிகளையும் தற்காலிக மற்றும் தொகுப்பு புதிய பணி நியமனங்களை முழுமையாக கைவிட்டு அனைத்து பணிகளும் நிரந்தரமாக்கபட வேண்டும் உள்ளிட்ட பல அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வட்டாட்சியர் வளாகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், நில அளவையர்கள், கிராம உதவியாளர்கள் உள்ளிட்டோர் 1 மணி நேரம் வெளிநடப்பு செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ராஜபாளையத்தில் சைபர் கிரைம் குற்றம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய போலீசார்




ராஜபாளையம் ஏப்27

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் பகுதியில் சைபர் கிரைம் குற்றத்தில் அதிக அளவில் பொதுமக்கள் ஏமாறுவதால் விருதுநகர் மாவட்டம் சைபர் கிரைம் குற்றப்பிரிவு போலீசாருக்கு நாள் தோறும் அதிகளவில் ஏமாந்த நபர்கள் புகார் அளிக்க செல்வதால் விருதுநகர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கண்ணன் உத்தரவின் பேரில் .ஏ.டி.எஸ்.பி. அசோகன் ஆலோசனைப்படி சைபர் க்ரைம் குற்றப்பிரிவு ஆய்வாளர் மீனா தலைமையில் போலீசார் ராஜபாளையம் பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் மற்றும் மக்கள் அதிகமாக கூடும் இடங்களுக்கு சென்று அங்கு நின்றிருந்த பெண்களிடம் சைபர் க்ரைம் குற்றங்கள் எவ்வாறு நடைபெறுகிறது அதில் பொதுமக்கள் தங்களை எவ்வாறு காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என விரிவாக எடுத்துரைத்தனர்.

போன் மூலமாக லோன் முகநூல் மூலமாக லோன் கொடுப்பதாக அறிவிப்பு வருவதை பார்த்து ஏமாறக்கூடாது. குறிப்பாக மும்பையில் இருந்து டிஜிட்டல் முறையை பயன்படுத்தி போதை பொருள் வைத்திருப்பதாக கூறி மிரட்டுவது இதுபோன்ற சம்பவங்களிலிருந்து பொதுமக்கள் எவ்வாறு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

காவல்துறையிலிருந்து பேசுவதாகவும் உங்கள் குற்றம் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது எனக் கூறி பணம் பறிக்கும் மோசடி கும்பலிடம் இருந்து எவ்வாறு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பது குறித்து பொதுமக்களுக்கும் பெண்களுக்கும் எடுத்துரைத்தனர்.

# திமிரி அருகே கிராம தேவதைக்கு மண்டல பூஜை விழா



ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு வட்டம் திமிரி மருத்துவாம்பாடி கிராம தேவதை அருள்மிகு ஸ்ரீ பொன்னியம்மன் திருக்கோயில் மற்றும் ஸ்ரீ பிள்ளையார், ஸ்ரீ மகாசக்தி மாரியம்மன், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ பஜனை கோயில், ஸ்ரீ சாய்பாபா, ஸ்ரீ நவகிரகம் ஆகிய சுவாமிகளுக்கு மகா கும்பாபிஷேக விழா கடந்த மார்ச் மாதம் 10தேதி சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மண்டல பூஜை விழா நடைபெற்று வந்த நிலையில் கடைசி நாளான நேற்று யாகசாலைகள் அமைத்து 108 ஓம திரவியங்கள் கொண்டு யாகம் செய்த புனித கலசநீர் ஸ்ரீ பொன்னியம்மனுக்கு அபிஷேகம் செய்து சிறப்பு ஆராதனை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பாஸ்கர் தலைமை தாங்கினார். இதில் தாமோதரன், ரங்கநாதன், ஜெகநாதன், கோதண்டன், எம்.எஸ். ஆர். தனசேகர், எம்.எஸ். ஆர்.ராஜசேகர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் பக்தர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். இறுதியில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# பழனி அருகே ஒலிபெருக்கி அமைப்பாளருக்கு அருவாள் வெட்டு

பழனி, ஏப்.27

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள கோதைமங்கலம் ஊராட்சியில் காவடி திருவிழாவிற்கு ஒலிபெருக்கி அமைக்கும் பணியில் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த பழனிச்சாமி என்பவரின் மகன் மாரிமுத்து என்பவர் ஈடுபட்டு இருந்தார். அப்பொழுது அங்கு வந்த மாற்று சமூகத்தைச் சேர்ந்த சுந்தரராஜன் என்பவரின் மகன் ஆதித்யா என்பவர் மாரிமுத்துடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

தொடர்ந்து இதில் ஆத்திரமடைந்த ஆதித்யா, வெட்டியுள்ளார். இதில் பலத்த காயம் அடைந்த மாரிமுத்து பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் .இதனிடையே ஆதித்யா,

மாரிமுத்துவை ஜாதியின் பெயரை சொல்லி கடுமையான வார்த்தைகளால் திட்டி உள்ளார் எனவும் கூறப்படுகிறது.தொடர்ந்து இந்த சம்பவம் பற்றி பழனி காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.



முன்னதாக ஜாதியின் பெயரால் நடந்த இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தவறான செய்தி பரப்பும் சமூக வலைத்தளம் மேல் நடவடிக்கை எடுக்க மகளிர் சுய உதவி குழு கோரிக்கை

சேலம், ஏப்.27

சேலம்மாவட்டம் ஆட்டையாம்பட்டி அடுத்துள்ள மருதபாளையம் பஞ்சாயத்து உட்பட்ட பகுதியில் 8 மகளிர் குழுக்கள் உள்ளது தோழி மகளிர் குழுகையாடல் செய்யப்பட்டதாக தவறான செய்தியை சமூக வலைதளங்களில் பரப்பி வருகிறார்கள்

இதனை கண்டித்து குழுவின் தலைவியான சந்திரா பார்த்திபன் இன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்து மாவட்ட ஆட்சியரிடம் மனு வழங்கினார்இந்த மனுவில் எங்கள் குழுவில் எந்த ஒரு தவறும் நடக்கவில்லை தீர விசாரிக்காமல் சமூக வலைத்தளங்களில் செய்திகளை வெளியிட்டதால் குழுவில் உள்ள அனைவரும் மிகுந்த மன வேதனையுடன் இருக்கிறார்கள் அதில் ஒருவர் தற்கொலைக்கு முயன்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்

இந்த செய்தியை பரப்பிய நபர்கள் மீதும் செய்தியை வெளியிட்ட நபர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் மேலும் வங்கிக்கு சென்றாலும் பல்வேறு இடங்களுக்கு சென்றாலும் தங்களை கேலி பொருளாக பார்க்கும் வகையில் உள்ளதுஇந்த சமூக வலைதள செய்தியால் எங்கள் குழுவில் உள்ள



அனைவரும் மிகுந்த மன வேதனையுடன் இருந்து வருகிறோம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் உடனடியாக அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழுவின் தலைவி அந்த மனுவில் குறிப்பிட்டு இருந்தார்

# கடலூர் மாவட்ட கலெக்டர் தலைமையில் விவசாயிகள் குறைகேட்பு நாள் கூட்டம் நடைபெற்றது

கடலூர், ஏப்.27

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகளுக்கான குறைகேட்பு மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பயிர் காப்பீட்டு நிலுவைத் தொகை வழங்கிட வேண்டும். விவசாயத்திற்கான மின்இணைப்பு வழங்கிட வேண்டும். குறைந்த மின் அழுத்தம் உள்ள பகுதிகளை சீர்செய்திட வேண்டும். மும்முனை மின்சாரம் வழங்கும் நேரம் குறித்து தெரிவித்திட வேண்டும். சரிவர செயல்படாத இசேவை மையங்களின் செயல்பாடுகளை கண்காணித்திட வேண்டும். மண் அரிப்பை தடுத்திட தேவையான இடங்களில் தடுப்பணை ஏற்படுத்திட வேண்டும். சொட்டு நீர் பாசனத்திற்கான மானியம் விடுவிக்க வேண்டும். விவசாய நிலங்களுக்கு செல்லும் பாதைகளை சீரமைப்பு செய்துதர வேண்டும். பயிர் காப்பீட்டு தொடர்பாக விவசாயிகள் கூட்டம் நடத்தி விளக்கம் அளிக்க வேண்டும். நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் தேவையான இடங்களில் கூடுதலாக திறக்க வேண்டும். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் கொள்முதல் செய்யப்படும் விளை பொருட்களுக்கு வழங்கப்படும் தொகைக் கான கால இடைவெளியினை குறைத்திட வேண் டும். முந்திரி மரங்களை அதிக விளைச்சல் தரும் மரங்களாக மாற்றிட ஆராச்சி செய்திட வேண்டும் போன்ற கோரிக்கைகளை விவசாயிகள் முன்வைத்தனர்.

மாவட்ட கலெக்டர் சிபி



ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்ததாவது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அரசால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை விவசாயிகளுக்கு கிடைத்திட விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வருவாய்த்துறை மூலம் வழங்கப்படும் பட்டா, சிட்டா, அடங்கல், விவசாயிகள் இக்கூட்டத்தில் தெரிவித்த கோரிக்கைகளை சாத்தியக்கூறின் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டு தீர்வு காண வேண்டும். விவசாயிகளுக்கு விதை நெல் மற்றும் உரம் தட்டுப்பாடின்றி கிடைத்திடவும், விவசாயிகளின் கோரிக்கைகளை ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கைமேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

# இளம்பெண்ணுக்கு 8வதாக ஆண் குழந்தை பிறந்தது சுகாதார அதிகாரிகள் அதிர்ச்சி



சேலம், ஏப்.27

சேலம் அயோத்தியாப் பட்டணம் அருகே கூட்டாத்துப்பட்டி சின்னஅக்ரஹாரம் பகுதியை சேர்ந்தவர் செந்தில்குமார் (வயது 41). கூலித் தொழிலாளி. இவருடைய மனைவி சண்முகப்பிரியா (33). இவர்களுக்கு கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இந்த தம்பதிக்கு ஏற்கனவே 7 பெண் குழந்தைகள் உள்ளன.

இந்நிலையில், சண்முகப்பிரியா மீண்டும் 8வது முறையாக கர்ப்பம் அடைந்தார். ஆனால் அவர் முறையாக கிராம சுகாதார செவிலியரிடம் பதிவு செய்யாமலும், மருத்துவமனையில் தடுப்பூசி உள்ளிட்ட எந்த சிகிச்சை பெறாமலும் இருந்துள்ளார். இதுபற்றி அக்கம் பக்கத்தினர் சுகாதாரத்துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

காரிப்பட்டி வட்டார மருத்துவக்குழுவினர் கர்ப்பிணி சண்முகப்பிரியாவை மீட்டு பிரசவத்திற்காக கூட்டாத்துப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு ஆண்குழந்தை பிறந்தது. இருப்பினும், சண்முகப்பிரியாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் உடனடியாக மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இளம்பெண்ணுக்கு 8வது குழந்தை பிறந்ததை அறிந்து சுகாதாரத்துறையினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மேலும் 7 பெண் குழந்தைகளுக்கு பிறகு 8வதாக ஆண் குழந்தை பிறந்துள்ளதால் குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# சென்னை விமான நிலையத்திற்குள் இருந்து பேருந்து சேவை தொடக்கம்



சென்னை, ஏப்.27

சென்னை மீனம்பாக்கத்தில் இருந்து கிளாம்பாக்கம் மற்றும் அக்கரை ஆகிய இடங்களுக்கு செல்லக் கூடிய 7 மாநகர பேருந்துகளை அமைச்சர் தா. மோ.அன்பரசன்,அமைச்சர் சிவசங்கர் ஆகியோர் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து பயணிகளின் வசதிக்காக கிளாம்பாக்கம் மற்றும் அக்கரைக்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 15 நிமிடங்களுக்கு ஒரு முறை கிளாம்பாக்கத்திற்கும், 30 நிமிடங்களுக்கு ஒரு முறை அக்கரைக்கும் பேருந்துகள் இயக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# 7 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை போக்சோ சட்டத்தில் தொழிலாளி கைது



திருவாரூர், ஏப்.27

திருவாரூர் அருகே உள்ள கிராமத்தில் தாய் மாமன் வீட்டில் மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த 7 வயது சிறுமி ஒருவர் தங்கி அங்கு உள்ள பள்ளியில் 2ம் வகுப்பு படித்து வருகிறார். சிறுமியின் தாய் மாமனுக்குதிருமணமாகி குழந்தை இல்லாததால் தனது தங்கை மகளை சிறுவயதில் இருந்து வீட்டில் வைத்து வளர்த்து படிக்க வைத்து வருகிறார்.

சம்பவத்தன்று சிறுமியின் தாய் மாமனும் அவருடைய மனைவியும் கூலி வேலைக்கு சென்ற நிலையில் பள்ளி விடுமுறை என்பதால் சிறுமி மட்டும் வீட்டில் தனியாக இருந்துள்ளார். அப்போது அங்கு வந்த ஆமூர் பெரிய காலனி தெரு பகுதியை சேர்ந்த கூலித்தொழிலாளி விக்னேஷ்(வயது28) வீட்டில் தனியாக இருந்த சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததுடன் இதை வெளியில் கூறினால் கொலை செய்து விடுவேன் என மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து சிறுமிக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதனால் வீட்டில் உள்ளவர்கள் சிறுமியிடம் விசாரித்தனர். அப்போது நடந்த விவரங்களை சிறுமி தனது குடும்பத்தினரிடம் கூறியுள்ளார். இதனால் சிறுமியை சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்குஅழைத்து சென்றனர். இது குறித்து சிறுமியின் தாய் திருவாரூர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் போக்சோசட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து விக்னேசை கைது செய்தனர். விக்னேசுக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.

# சத்துணவு மையங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும்: ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

சென்னை, ஏப்.27

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தி.மு.க. அரசால் நிதி நிலை அறிக்கைகள்வாயிலாகவும், கொள்கை விளக்கக் குறிப்புகள் வாயிலாகவும் வெளியிடப்படும் அறிவிப்புகள் வெத்துவேட்டு அறிவிப்புகளாக இருக்கின்றனவே தவிர செயல்படுத்தும் அறிக்கைகளாக இல்லை. இதற்கு பல உதாரணங்களைச்சுட்டிக் காட்டலாம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கேற்ப, 20242025ம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மானியத்திற்கான கொள்கை விளக்கக் குறிப்பில், "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்" என்ற தலைப்பின்கீழ், 'சமையலறை சாதனங்கள் வழங்கல்' என்ற உபதலைப் பின்கீழ், சத்துணவு மையங்களுக்கு 25.41 கோடி ரூபாய் செலவில் புதிய சமையல் உபகரணங்கள் 20222023ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேபோன்று 2025 2026ம் ஆண்டிற்கான சமூகநலன் மற்றும் மகளிர்உரிமைத்துறை மானியத்திற்கான கொள்கை விளக்கக் குறிப்பில், "புரட்சித் தலைவர் எம். ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்" என்ற தலைப்பின் கீழ், 'சத்துணவு மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள்' என்ற உபதலைப்பின்கீழ், சத்துணவு மையங்களை நவீனப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக சத்துணவு மையங்களில் சமையல் உபகரணங்கள் எரிவாயு இணைப்புகளுடன் வழங்கப்பட்டுள்ளன என்றும், 2,100 சத்துணவு மையங்களுக்கு வைப்பறையுடன் கூடிய சமையலறை படிப்படியாக கட்டுவதற்காக 173 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வளவு நிதி ஒதுக்கியும், 18042025 அன்று விருத்தாசலம் அடுத்த செம்பனக்குறிச்சி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலும், 09042025 அன்று கடலூர் சத்துணவு மையத்திலும் தீ விபத்து ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு எரிவாயு உருளையில் பொருத்தப்பட்டுள்ள ரெகுலேட்டர், காஸ் டியூப் போன்றவை பழுதடைந்திருப்பதே காரணம் என்றும், பல சத்துணவு மையங்களில் இந்த நிலைமைதான் நிலவுகிறது என்றும், புதிய காஸ் அடுப்பு கேட்கப்பட்டாலும், ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட பழைய காஸ் அடுப்பு தான் வழங்கப்படுகிறது என்றும் சத்துணவு மையங்களில் பணிபுரிவோர் தெரிவிக்கின்றனர். சத்துணவு மையங்களில் உள்ள எரிவாயு அடுப்பைக் கூட புதுப்பிக்க முடியாத திறனற்ற அரசாக தி.மு.க. அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது. புதிய எரிவாயு அடுப்பையே வழங்க முடியாத தி.மு.க. அரசு, சத்துணவு மையங்களை நவீனப்படுத்துவதாகக் கூறுவது நகைப்புக்குரியதாக உள்ளது. இது கடும் கண்டனத்திற்குரியது. ஒதுக்கப்பட்ட நிதி எல்லாம் எங்கு போய் சேருகிறதோ என்ற எண்ணம் மக்கள் மத்தியில் நிலவுகிறது. அரசின் மெத்தனப் போக்குக் காரணமாக சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் மாணவ மாணவியரின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

சத்துணவு மையங்களில் பணியாற்றுபவர்கள் மற்றும் மாணவ மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில், பழுதடைந்த எரிவாயு அடுப்பு மற்றும் உபகரணங்களுக்குப் பதிலாக புதிய எரிவாயு அடுப்பு மற்றும் உபகரணங்களை வழங்கிடுமாறும், அரசால் ஒதுக்கப்படுகின்ற நிதி சரியாக செலவழிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்திடுமாறும் முதல் அமைச்சரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# விருதுநகர்: மின்னல் தாக்கி இளைஞர் உயிரிழப்பு



விருதுநகர், ஏப்.27

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே உள்ள முத்துராமலிங்கபுரத்தைச் சேர்ந்தவர் வக்கீல் முனியசாமி (27 வயது). இவர் இன்று காலையில் திருச்சுழியில் உள்ள குற்றவியல் கோர்ட்டுக்கு வந்திருந்தார். பின்னர் அவர் மதியம் வீட்டுக்கு புறப்பட்டபோது இடி, மின்னலுடன் மழை பெய்தது.

இதையடுத்து அவர் கோர்ட்டு முன்பு உள்ள ஒரு மரத்தின் அடியில் ஒதுங்கி நின்றார். மஞ்சம்பட்டியைச் சேர்ந்த பிச்சை (50), சரவணன் (27) ஆகியோரும் அங்கு நின்றிருந்தனர். திடீரென்று பலத்த மின்னல் வெட்டியது. அப்போது, வக்கீல் முனியசாமி உள்பட 3 பேரும் பலத்த காயம் அடைந்தனர்.

உடனடியாக அக்கம் பக்கத்தினர் அவர்களை மீட்டு திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி முனியசாமி பரிதாபமாக இறந்தார். மற்ற 2 பேருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சேலம் அருகே கோவில் திருவிழாவில் பட்டாசு வெடித்து 3 பேர் உயிரிழப்பு




சேலம், ஏப்.27

சேலம் மாவட்டம் ஓமலூர் பூசாரிப்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி திரவுபதி அம்மன் கோவில் திருவிழா நடந்தது. இதனை முன்னிட்டு பட்டாசு மூட்டையை டூவிலரில் கொண்டு சென்றனர். வழியில், குப்பை எரிந்து கொண்டு இருந்தது. அந்த வழியாக சென்ற டூவிலர் கட்டுப்பாட்டை இழந்துஅதில்விழுந்தது. இதில் பட்டாசுகள் தீப்பிடித்து வெடித்து சிதறின். இச்சம்பவத்தில், கஞ்சநாயக்கன்பட்டி கோட்டை மேட்டை சேர்ந்த செல்வராஜ்(29) மற்றும் அடையாளம் தெரியாத இரண்டு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். தங்கராஜ் என்பவரது மகன் லோகேஷ் படுகாயமடைந்து அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். பட்டாசு வெடித்து திருவிழா சமயத்தில் 3 பேர் உயிரிழந்த சம்பவத்தால் கிராமமே சோகத்தில் மூழ்கி உள்ளது.

இதுகுறித்து போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், சுவாமி திருக்கல்யாணத்திற்காக பூசாரிப்பட்டி பகுதியில் இருந்து திருமண சீர்வரிசைஎடுத்து சென்ற போதுபட்டாசுவெடித்து விபத்து ஏற்பட்டதும், அதில்3பேர்பலியானதும் தெரிந்தது.இந்தசம்பவம் தொடர்பாக ஓமலூர் டிஎஸ்பி தலைமையில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நெல்லையில் சர்வ சாதாரணமாக உலா வரும் கரடி... வீடியோ



திருநெல்வேலி ஏப்.27

நெல்லை மாவட்டம் அம்பை அடுத்து கல்லிடைக்குறிச்சி நெசவாளர் காலனி பகுதியிலுள்ள கோவில் வளாகத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் ஒற்றை கரடி சுற்றித்திரிவதாக வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்துஒற்றை கரடியை வனத்துறையினர் கூண்டு வைத்து பிடித்து மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் விட்டனர். இந்நிலையில் தற்போது மீண்டும் அதே பகுதியில் கரடி ஒன்று சுற்றித்திரிந்த சம்பவத்தால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் கோவில் வளாகத்தில் கரடி சுற்றித்திரிந்த சிசிடிவி காட்சிகள் வெளியாகி அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஊட்டி, கொடைக்கானல் விடுதிகளுக்கு ஐகோர்ட்டு போட்ட அதிரடி உத்தரவு



சென்னை, ஏப்.27

ஊட்டி, கொடைக்கானலில் உள்ள தங்கும் விடுதிகள் உரிய அனுமதியுடன் செயல்படுகின்றனவா? என ஆய்வு செய்ய மாவட்ட வருவாய் அதிகாரி, நகராட்சி ஆணையர், மாவட்ட சுற்றுலாத்துறை அதிகாரி அடங்கிய குழுவை நியமித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

மேலும் உரிமம் இல்லாத விடுதிகளை மூட வேண்டும் என்றும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து தங்கும் விடுதிகள் அதிக கட்டணங்கள் வசூலிக்கன்றனவா என்பது குறித்து விசாரித்து அறிக்கை அளிக்கவும், சட்டவிரோதமாக செயல்படும் தங்கும் விடுதிகள் குறித்து புகார் தெரிவிக்க பிரத்யேக தொலைபேசி எண், இணையதள வசதியை ஏற்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# ராக்கெட் ராஜா உட்பட 3 ரவுடிகள் சென்னை வர தடை



சென்னை, ஏப்.27

பிரபல ரவுடிகள் ராக்கெட் ராஜா, நடுவீரப்பட்டு லெனின் மற்றும் நெடுங்குன்றம் சூர்யா ஆகிய 3 பேர் சென்னை மாநகர காவல் எல்லைக்குள் நுழைய தடை விதித்து சென்னைகாவல் ஆணையரகம் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஏ பிளஸ் சரித்திர பதிவேடு குற்றவாளிகளான 3 பேரும் ஒரு வருடத்திற்கு சென்னை மாநகர காவல் எல்லைக்குள் நுழையக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற வழக்கு மற்றும் காவல் நிலைய விசாரணை தவிர்த்து வேறு எதற்காகவும் சென்னைக்குள் வரக்கூடாது வரக்கூடாது என்றும் இவர்களால் தீங்கு விளைவிக்கக்கூடிய சூழல் மற்றும் வன்முறை நிகழக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் காவல் துறை தரப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# பொதுப்பணித்துறை, நீர்வளத்துறை செயலாளர்கள் மாற்றம்

சென்னை, ஏப்.27

பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை செயலாளர்களை இடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக தலைமைச் செயலாளர் முருகானந்தம் வெளியிட்டுள்ள உத்தரவில் தெரிவித்திருப்பதாவது:

பொதுப்பணித்துறை செயலாளராக செயல்பட்டு வந்த ஜெயகாந்தன் ஐ.ஏ.எஸ். நீர்வளத்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். நீர்வளத்துறை செயலாளராக இருந்து வந்த மங்கத் ராம் சர்மா பொதுப்பணித்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பென்னாகரம் பேரூராட்சியில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி: பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் தொடங்கி வைத்தார்



தர்மபுரி,ஏப்.27

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் பேரூராட்சியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பேரணிக்கு பேரூராட்சி தலைவர் வீரமணி தலைமை தாங்கினார். செயல் அலுவலர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். பேரணியை பேரூராட்சிகள் உதவி இயக்குனர் கணேஷ் கொடியை அசைத்து துவக்கி வைத்தார். இந்த பேரணி பென்னாகரம் பஸ் நிலையத்தில் தொடங்கி முக்கிய வீதிகள் வழியாக பேரூராட்சி அலுவலகம் வரை நடைபெற்றது. இந்த பேரணியில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுவதை தவிர்த்து துணிப்பை பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்தி மஞ்சப்பை விழிப்புணர்வு நோட்டீஸ்கள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 8வதுவார்டு பகுதியில் அமைந்துள்ள ஈஸ்வரன் கோயில் வளாகத்தில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த பேரணியில் பேரூராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு நோட்டீஸ்களை வழங்கினர்

# திண்டுக்கல் குடகனாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவு

திண்டுக்கல், ஏப்.27

திண்டுக்கல் குடகனாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், குடகனாறு அணையில் இருந்து, வலது மற்றும் இடது பிரதான கால்வாய் மூலம், திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களிலுள்ள பாசன நிலங்கள் பயன் பெறும் வகையில் 27.04.2025 முதல் 25.07.2025 வரை 90 நாட்களில் 45 நாட்களுக்கு (7 நாட்கள் கால்வாயில் தண்ணீர்திறப்பும் 7 நாட்கள்தண்ணீர் நிறுத்தம்) வலது பிரதான கால்வாய் வழியாக வினாடிக்கு 40 கன அடி வீதம் 155.52 மில்லியன் கன அடிக்கு மிகாமலும் மற்றும் இடதுபிரதானகால்வாய் வழியாகவினாடிக்கு 14 கன அடி வீதம் 54.43 மில்லியன் கன அடிக்கு மிகாமலும் ஆக மொத்தம் 209.95 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், திண்டுக்கல் மாவட்டத்தில் 4262.78 ஏக்கர் நிலங்கள் மற்றும் கரூர் மாவட்டத்தில் 4737.22 ஏக்கர் நிலங்கள், ஆக மொத்தம் 9000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

27.4.2025

# உளுந்தூர்பேட்டை டி.எஸ்.பி. காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம்



கள்ளக்குறிச்சி, ஏப்.27

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை டி.எஸ்.பி. பிரதாப் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஒரு லாரிக்கு ஒரு நாளைக்கு ரூ.5,000 கொடுக்க வேண்டும் என டி.எஸ்.பி. பிரதாப் மணல் கடத்தல்காரர்களுடன் பேரம் பேசிய ஆடியோ வெளியான விவகாரத்தில், அவர் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் டிஎஸ்பி பிரதாப் மீதான ஐ.ஜி. விசாரணைக்கும் காவல் துறை உத்தரவிட்டுள்ளது.

# பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை



பொள்ளாச்சி, ஏப்.27

பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக சுற்றுவட்டாரம் மற்றும் தமிழககேரள எல்லை பகுதியில் வசிக்கும் ஏராளமான மக்கள் வருகின்றனர். அதன்படி தற்போது பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரியில் 462 உள்நோயாளிகளும், தினமும் 1,500 வெளிநோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதற்கிடையே அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் நோயாளிகள் கடும் அவதிப்படுகின்றனர். மேலும்திடீர்மின்தடையின் காரணமாக வயர்களில் தீப்பிடிப்பது போன்ற சம்பவங்களும் தொடர்ந்து நடக்கிறது.

அத்துடன் சி.டி.ஸ்கேன், எக்ஸ்ரே போன்ற உபகரணங்களும் பழுதாகி விடுகிறது. இதன் காரணமாக உரிய சிகிச்சை அளிக்க முடியாததால் நோயாளிகள் கடும்அவதிப்படுகின்றனர்.

இதனால் பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு முடிவு செய்து கடந்த 3 ஆண்டுக்கு முன்பு அரசு நிதி ஒதுக்கீடு செய்தது. அதன்படி ரூ.2.9 கோடி செலவில் புதிதாக ஜெனரேட்டர், உயர் அழுத்த மின்பாதை, மின்மாற்றி அமைக்கும் பணிகள் தொடங்கி நடைபெற்று வந்தன.

ஆனால் கூடுதல் நிதி தேவைப்பட்டதால் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுவிட்டன. இதையடுத்து கூடுதல் நிதியாக ரூ.33½ லட்சம் ஒதுக்கீடு செய்து 2 மாதங்கள் ஆகியும் பணிகள் தொடங்கப்படாமல் இருந்தது. இதன் காரணமாக உயர் அழுத்த மின்பாதை, மின் மாற்றி அமைக்கும் இடம் புதர்மண்டி காணப்பட்டது.

இதனால் சமூக ஆர்வலர்கள் அதிருப்தி தெரிவித்தனர். இதுகுறித்து தினத்தந்தி நாளிதழில் கடந்த 18ந்தேதி படத்துடன் செய்தி வெளியானது. இந்தநிலையில் இதன் எதிரொலியாக அதிகாரிகளின் உத்தரவின்பேரில் புதர்களை அகற்றி உயர் அழுத்த மின்பாதை, மின் மாற்றி அமைக்கும் பணிகள் மீண்டும் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதன்மூலம் பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு தடையில்லா மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு தடையில்லா மின்சாரம் வழங்க கூடுதலாக நிதி ஒதுக்கியும் உயர் அழுத்த மின்பாதை, மின்மாற்றி அமைக்கும் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டு தாமதமாகி வந்தது. இதையடுத்து தற்போது பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன.

செய்தி வெளியிட்ட தினத்தந்தி நாளிதழுக்கும், இதற்கு நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கும், நன்றி தெரிவிக்கப்படுகிறது. எனவே இந்த பணிகளை விரைந்து முடித்து பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு தடையில்லா மின்சாரம் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

# துணை வேந்தர்களை பங்கேற்க விடாமல் தடுத்தது அவசரகால நாட்களை நினைவூட்டுகிறது கவர்னர் ஆர்.என். ரவி



சென்னை, ஏப்.27

பல்கலைக்கழகதுணை வேந்தர்களைநியமிப்பது மற்றும் நீக்குவதற்கான அதிகாரம் உள்பட பல்கலைக்கழகங்கள் தொடர்பாக கவர்னரிடம் இருந்த அதிகாரங்களை தமிழக அரசுக்கு மாற்றம் செய்யும் 10 சட்ட மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்காத நிலையில் சமீபத்தில் சுப்ரீம் கோர்ட்டு ஒப்புதல் அளித்தது. 10 மசோதாக்களும் சட்டமாக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் கவர்னர் ஆர்.என்.ரவி தலைமையில் ஊட்டி கவர்னர் மாளிகையில் 2 நாட்கள் துணை வேந்தர்கள் மாநாடு நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டைதுணைஜனாதிபதி ஜெகதீப் தன்கர் இன்று தொடங்கி வைத்தார். சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை தொடர்ந்து, துணை வேந்தர்களுடன் தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் ஆலோசனை நடத்திய நிலையில் கவர்னரும் துணை வேந்தர்கள் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்கிடையே துணை வேந்தர்கள் மாநாடு விவகாரத்தில், 'தமிழக அரசுடன் மோதல் இல்லை' என கவர்னர் மாளிகை விளக்கம் அளித்திருந்தது.

இந்த நிலையில் இந்த மாநாட்டில் துணை வேந்தர்களை பங்கேற்க விடாமல் தடுக்க முதல் அமைச்சர் ஸ்டாலின் காவல்துறையைப் பயன்படுத்தியுள்ளார் என்று கவர்னர் ஆர். என். ரவி குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

முதல் அமைச்சர் ஸ்டாலின் காவல்துறையைப் பயன்படுத்தி, இன்று முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்த மாநாட்டில் மாநில பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களைபங்கேற்க விடாமல் தடுத்த விதம், அவசரகால நாட்களைநினைவூட்டுகிறது. மாநில உயர்கல்வி அமைச்சர்,துணை வேந்தர்களிடம் மாநாட்டில் பங்கேற்க வேண்டாம் என்று தொலைபேசியில்மிரட்டல்விடுத்தது பலனளிக்காத நிலையில், முதல்அமைச்சர் ஸ்டாலின் காவல்துறையைப் பயன்படுத்தியுள்ளார்.

மாநாட்டு நாளில் ஒரு துணைவேந்தர் காவல் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். ஊட்டியை அடைந்த மற்றவர்கள் தங்கிய விடுதிகளின் அறை கதவுகள் நள்ளிரவில் தட்டப்பட்டுள்ளன. மாநாட்டில்பங்கேற்றால் உயிருக்கு மோசமான விளைவுகள் நேரிடும் என்றும், மாநாட்டில் கலந்து கொண்டால் வீடு திரும்ப அனுமதிக்கப்பட மாட்டீர்கள் என்றும் காவல்துறையினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இது காவல்துறையின் அப்பட்டமான துஷ்பிரயோகம் ஆகும்!

இங்கு காவல் ராஜ்ஜியமா நடக்கிறது? மாநிலத்துக்குள் ஒரு கல்வி மாநாட்டில் கலந்து கொள்ள துணை வேந்தர்களுக்கு கல்விச்சுதந்திரம் இல்லையா? அல்லது தலித் மற்றும் ஏழை மாணவர்களுக்குப் பெரிதும் உதவும் மாநில பல்கலைக்கழகங்களின் தரத்தை உயர்த்துவதன் விளைவுகள்,எந்தவொரு தரமேம்பாடும் மாணவர்களை ஆர்வமுள்ளவர்களாகவும், ஊக்கமளிப்பவர்களாகவும் மாற்றும் என்பதால் இது தனது அரசியல் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தலாகலாம் என முதல்வர் ஸ்டாலின் அச்சப்படுகிறாரா? இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# போக்சோ வழக்கில் லஞ்சம் பெற்றதாக புகார்: பெண் இன்ஸ்பெக்டர், ஏட்டு பணியிடை நீக்கம்



கடலூர், ஏப்.27

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் பகுதியை சேர்ந்த 12ம் வகுப்பு படித்து வந்த 17 வயது சிறுமியை சமீபத்தில் 17 வயதுடைய சிறுவன் திருமணம் செய்து கொள்வதாக ஆசைவார்த்தை கூறி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

அதேபோல் சிறுமியின் உறவினர் ஒருவரும் அவரை மிரட்டி பல முறை பலாத்காரம் செய்ததாக தெரிகிறது.


இதுபற்றி சிறுமி விருத்தாசலம் மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

அதன்பேரில் அந்த சிறுவன், சிறுமியின் உறவினர் மற்றும் உடந்தையாக இருந்ததாக சிறுமியின் தாய் ஆகிய 3 பேரையும் போலீசார் போக்சோ சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக போலீஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட 3 பேரை போலீசார் விடுவித்தனர். விடுவிக்கப்பட்ட 3 பேரிடமும், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமி, ஏட்டு சிவசக்தி ஆகியோர் லஞ்சம் கேட்டு பெற்றதாக புகார் எழுந்தது. இதுதொடர்பாக போலீஸ் சூப்பிரண்டு ஜெயக்குமார் விசாரணை நடத்தினார்.

இந்த நிலையில், இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமி, ஏட்டு சிவசக்தி இருவரும் அதிரடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

# காஷ்மீரில் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு கனவில்கூட நினைக்காத வகையில் தண்டனை: ரஜினிகாந்த் வலியுறுத்தல்



சென்னை, ஏப்.27

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த நடிகர் ரஜினிகாந்த் கூறியதாவது:

காஷ்மீரில் நடந்த பயங்கரவாத தாக்குதல் சம்பவம் மிகவும் கடுமையாக கண்டிக்கத்தக்கது. காஷ்மீரில் இயற்கையாகவே அமைதி திரும்பி இருப்பது எதிரிகளுக்கு பிடிக்கவில்லை. அதை கெடுக்க வேண்டும் என்பதற்காக இது போன்ற செயலில் ஈடுபடுகிறார்கள். இதை செய்தவர்களையும், அதன் பின்னால் இருப்பவர்களையும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் கண்டு பிடிக்க வேண்டும். அவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும். இனிஇதுபோன்றசெயல்களை மீண்டும் செய்ய அவர்கள் கனவில்கூட நினைக்கக்கூடாது. அது போன்ற நடவடிக்கையை மத்திய அரசு எடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. விரைவாகஅதைசெய்யவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# டார்க் படத்தின் 2வது பாடல் வெளியீடு




தயாரிப்பு நிறுவனமான எம்ஜி ஸ்டூடியோஸ் அவர்கள் தயாரிக்கும்முதல்திரைப்படத்தின்பர்ஸ்ட்லுக்மற்றும்டைட்டில் போஸ்டரை சில மாதங்களுக்கு முன் வெளியிட்டனர். இப்படத்தின் மூலம் அஜய் கார்த்தி கதாநாயகனாக அறிமுகமாகிறார். இப்படத்தை கல்யாண் கே ஜெகன் இயக்கியுள்ளார். இப்படத்தின் கதையை டாடா பட இயக்குனர் கணேஷ் கே பாபு எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகிறார் அஞ்சனா முருகன்.

இது ஒரு ஹாரர் கதைக்களத்துடன் உருவாகியுள்ளது. படத்தின் முதல் பாடலான 'ஒரு ஸ்டெப் வச்சா' பாடல் வெளியாகி வைரலானது. இப்பாடலை தமன், ஜிவி பிரகாஷ் குமார் மற்றும் அத்விதீயா வொஜலா இணைந்து பாடியுள்ளனர். பாடல் மிகவும் துள்ளலாக அமைந்துள்ளது. பாடலின் வரிகளை விவேக் எழுதியுள்ளார். மனு ரமேசன் இசையமைத்துள்ளார்.

இந்நிலையில் "டார்க்" படத்தின் இரண்டாம் பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. 'இருள் என்பது' எனத்தொடங்கும் இப்பாடலை கணேஷ் கே பாபு வரிகளில் யுவன் சங்கர் ராஜா பாடியுள்ளார்.விரைவில் திரைப்படம் வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# கவின் நடிக்கும் "கிஸ்" பர்ஸ்ட் சிங்கிள் புரோமோ வெளியீடு




படங்களில்சிறியகதாபாத்திரங்களில்நடித்துவந்தகவின்'நட்புன்னா என்னானு தெரியுமா' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் ஹீரோவாக அறிமுகமானார். அதைத்தொடர்ந்து வெளியான 'லிப்ட்' , 'டாடா' திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. கடைசியாக கவின் நடித்திருந்த 'பிளடி பெக்கர்' திரைப்படம் கலவையான வரவேற்பையே பெற்றது.

சமீபத்தில் கவின் நடிக்கும் புதிய படத்தின் அறிவிப்பு வெளியானது. அதன்படி, தமிழ் திரையுலகின் முன்னணி நடன இயக்குனர்களில் ஒருவரானசதீஷ், இப்படத்தின்மூலம்இயக்குனராகஅறிமுகமாகிறார். இந்த படத்தில் கவினுக்கு ஜோடியாக 'அயோத்தி' படத்தின் மூலம் பிரபலமடைந்த நடிகை பிரீத்தி அஸ்ரானி நடித்துள்ளார்.

ரோமியோ பிக்சர்ஸ் ராகுல் தயாரிப்பில் உருவாகும் இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியாக உள்ளநிலையில், படத்தின் டீசர் சமீபத்தில் வெளியானது.

இந்நிலையில் படத்தின் முதல் பாடல் புரோமோ வீடியோ வெளியாகியுள்ளது. பாடல் வரும் 30ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# சூர்யா விஜய் சேதுபதியின் "பீனிக்ஸ்" புதிய ரிலீஸ் தேதி அறிவிப்பு




தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவர் விஜய் சேதுபதி. இவரது மகன் சூர்யா. இவர் ஏற்கனவே விஜய்சேதுபதியுடன் இணைந்து 'சிந்துபாத்' என்ற படத்தின் மூலமாக சினிமாவில் அறிமுகமானார். இந்த நிலையில், விஜய் சேதுபதி மகன் சூர்யா கதாநாயகனாக அறிமுகமாகி உள்ள 'பீனிக்ஸ்'. இந்த படத்தை இயக்குனர் அனல் அரசு இயக்கி உள்ளார். இப்படத்தின் மூலம் அனல் அரசு இயக்குனராக அறிமுகமாகவுள்ளார்.

பிரேவ் மேன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு சாம் சி.எஸ் இசையமைக்கிறார். சமீபத்தில் இந்த படத்தின் டீசர் வெளியாகி வரவேற்பை பெற்றுள்ளது. இந்தபடத்தில் சூர்யாவுடன் இணைந்து வரலட்சுமி சரத்குமார், நடிகர் சம்பத், நடிகை தேவதர்ஷினி ஆகியோரும் நடித்துள்ளனர்.

டீசரில், முதல் காட்சியே சிறுவர் சீர்த்திருத்த சிறையுடன் தொடங்கியது. கையில் விலங்குடன் குற்றவாளியாக சீர்த்திருத்த பள்ளியில் முகத்தை மூடிய நிலையில் சூர்யா காணப்பட்டார். ஒரு பாக்ஸிங் வீரரைப் போல சண்டைக் காட்சிகளில் ஈடுபட்டிருந்தார். ஆக்சன் கதைக் களத்தில் உருவாகியுள்ள இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

படத்தின் முதல் பாடலான 'யாராண்ட' பாடல் வெளியாகி வைரலானது . வித்யா தாமேந்திரன் எழுதிய வரிகளுக்கு சாம். சிஎஸ் இசையமைத்துள்ளார். 'பீனிக்ஸ்' திரைப்படம் முன்னதாக கடந்த ஆண்டு நவம்பர் 14ம் தேதி வெளியிட திட்டமிடப்பட்டிருந்த நிலையில் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் 'பீனிக்ஸ்' படத்தின் புதிய ரிலீஸ் தேதியை படக்குழு அறிவித்துள்ளது. படம் வரும் ஜூலை 4ம் தேதி திரையரங்கில் வெளியாகிறது.

# ஐதராபாத் அணிக்கு எதிரான தோல்வி...தோனி கூறியது என்ன ?

18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று நடைபெற்ற 43வது லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின . இன்றைய ஆட்டத்தில் டாஸ் வென்ற ஐதராபாத் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணி முதலாவதாக பேட்டிங் செய்தது.

சென்னை அணி 19.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 154 ரன்கள் எடுத்தது. டெவால்டு பிரெவிஸ், 25 பந்துகளில்(1 பவுண்டரி, 4 சிக்ஸர்கள்) 42 ரன்கள் குவித்தார்.

ஐதராபாத் அணியில் அதிகபட்சமாக ஹர்ஷல் பட்டேல் 4 விக்கெட்டுகளையும், பேட் கம்மின்ஸ், உனத்கட் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். தொடர்ந்து 155 ரன்கள் என்ற இலக்கை நோக்கி ஐதராபாத் அணி விளையாடியது.

தொடக்கத்தில் அபிஷேக் சர்மா ரன் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார் . பின்னர் டிராவிஸ் ஹெட் 19 ரன்களில் ஆட்டமிழந்தார் . தொடர்ந்து ஹென்ரிச் கிளாசன் 7 ரன்களில் ஆட்டமிழந்தார். மறுபுறம் இஷான் கிஷன் சிறப்பாக விளையாடினார் . பந்துகளை பவுண்டரி, சிக்சருக்கு பறக்க விட்டார். அவர் 44 ரன்களில் ஆட்டமிழந்தார் .

தொடர்ந்து கமிந்து மெண்டிஸ் அதிரடியாக விளையாடினார். இறுதியில் 18..4 ஓவர்கள் முடிவில்5 விக்கெட் இழப்பிற்கு ஐதராபாத் 155 ரன்கள் எடுத்தது . இதனால் ஐதராபாத் அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது .

இந்த நிலையில் , தோல்விக்கு பிறகு பேசிய சென்னை அணி கேப்டன் தோனி கூறியதாவது,

நாங்கள் தொடர்ந்து விக்கெட்டுகளை இழந்து கொண்டிருந்தோம், முதல் இன்னிங்ஸில் விக்கெட் சற்று சிறப்பாக இருந்தது, 155 ரன்கள் என்பது நியாயமான ஸ்கோர் அல்ல. எங்கள் சுழற்பந்து வீச்சாளர்கள் சரியான பகுதிகளில் பந்து வீசினர், ஆனால் நாங்கள் 1520 ரன்கள் குறைவாக இருந்தோம். பிரெவிஸ் மிகவும் நன்றாக பேட் செய்தார். சுழற்பந்து வீச்சாளர்கள் வரும்போது நாங்கள் சற்று சிரமப்பட்ட மிடில் ஆர்டரில் நமக்கு அது போன்ற பேட்ஸ்மேன் தேவை,.

பெரிய ஷாட் அடிக்க முயற்சி செய்ய வேண்டும், அங்குதான் நாங்கள் பற்றாக்குறையாக இருக்கிறோம், உண்மையில் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை என்று நினைக்கிறேன்.என தெரிவித்தார் .

# மாட்ரிட் ஓபன் டென்னிஸ்: கின்வென் ஜெங் அதிர்ச்சி தோல்வி

மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் நம்பர் ஒன் வீராங்கனை அரினா சபலென்கா (பெலாரஸ்) 63, 64 என்ற நேர் செட்டில் அனா பிளிங்கோவாவை (ரஷியா) வீழ்த்தி 3வது சுற்றுக்குள் நுழைந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் ஒலிம்பிக் சாம்பியனான கின்வென் ஜெங் (சீனா) 4-6, 4-6 என்ற நேர் செட்டில் அனஸ்டாசியா பொடாபோவாவிடம் (ரஷியா) அதிர்ச்சி தோல்வி கண்டார்.

# ஐபிஎல்: சென்னை அணியை வீழ்த்தி ஐதராபாத் வெற்றி



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று நடைபெற்ற 43வது லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின . இன்றைய ஆட்டத்தில் டாஸ் வென்ற ஐதராபாத் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணி முதலாவதாக பேட்டிங் செய்தது.

ஷமி வீசிய முதல் ஓவரின் முதல் பந்திலேயே தொடக்க ஆட்டக்காரர் ஷேக் ரஷீத் கேட்ச் ஆகி ஆட்டமிழந்தார். இதையடுத்து மற்றொரு தொடக்க வீரர் ஆயுஷ் மாத்ரேவுடன் சாம் கர்ரன் ஜோடி சேர்ந்தார். இதில் சாம் கர்ரன் 9 ரன்களில் அவுட் ஆகி வெளியேற, ஆயுஷ் மாத்ரே 19 பந்துகளில் 30 ரன்கள்(4 பவுண்டரிகள்) அடித்து ஆட்டமிழந்தார். நிதானமாக ஆடிய ஜடேஜா(21 ரன்கள்) கமிந்து மெண்டிஸ் பந்துவீச்சில் போல்ட் ஆனார். அரைசதத்தை நோக்கி முன்னேறிய டெவால்டு பிரெவிஸ், 25 பந்துகளில்(1 பவுண்டரி, 4 சிக்ஸர்கள்) 42 ரன்கள் குவித்த நிலையில், ஹர்ஷல் பட்டேல் வீசிய 13வது ஓவரில் கேட்ச் ஆகி வெளியேறினார். சிவம் துபே 12 ரன்களிலும், கேப்டன் தோனி 6 ரன்களிலும் அவுட் ஆன நிலையில், அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். தீபக் ஹூடா(22 ரன்கள்) உதத்கட் வீசிய கடைசி ஓவரின் 5வது பந்தில் கேட்ச் ஆனார்.இறுதியில் சென்னை அணி 19.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 154 ரன்கள் எடுத்தது. ஐதராபாத் அணியில் அதிகபட்சமாக ஹர்ஷல் பட்டேல் 4 விக்கெட்டுகளையும், பேட் கம்மின்ஸ், உனத்கட் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். தொடர்ந்து 155 ரன்கள் என்ற இலக்கை நோக்கி ஐதராபாத் அணி விளையாடியது.

தொடக்கத்தில் அபிஷேக் சர்மா ரன் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார் . பின்னர் டிராவிஸ் ஹெட் 19 ரன்களில் ஆட்டமிழந்தார் . தொடர்ந்து ஹென்ரிச் கிளாசன் 7 ரன்களில் ஆட்டமிழந்தார். மறுபுறம் இஷான் கிஷன் சிறப்பாக விளையாடினார் . பந்துகளை பவுண்டரி, சிக்சருக்கு பறக்க விட்டார். அவர் 44 ரன்களில் ஆட்டமிழந்தார் .

தொடர்ந்து கமிந்து மெண்டிஸ் அதிரடியாக விளையாடினார். இறுதியில் 18..4 ஓவர்கள் முடிவில்5 விக்கெட் இழப்பிற்கு ஐதராபாத் 155 ரன்கள் எடுத்தது . இதனால்ஐதராபாத்அணி 5 விக்கெட்டுகள்வித்தியாசத்தில் வெற்றி பெற்றது .

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.